பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

அஹமதி தமிழ் திருச்சபை

# "கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன் கொடுப்பார், கர்த்தர் தமது ஜனத்திற்கு சமாதானம் அருளி அவர்களை ஆசீர்வாதிப்பார்".

சங் :29:11

செய்தி மலர்
2022
ஆகஸ்ட்

இதழ் : 04
மலர் : 19



# சபை ஊழியரின் அன்பு மடல்



கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் சபையார் அனைவரையும் வாழ்த்துகிறேன். சமாதானத்தின் தேவன் தாமே நாம் ஒவ்வொருவரையும், சமாதானத்தோடும், சந்தோஷத்தோடும், சகல ஆசீர்வாதங்களோடும் நடத்தி வந்து கொண்டிருப்பதர்க்காக நாம் ஒவ்வொருவரும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி சொல்லி துதிக்கலாம். கடந்த மாதம் எல்லா ஆராதனைகள், ஜெபகூடுகைகளிலும் தேவ பிரசன்னம், வழிநடத்துதல், ஆசிர்வாதம் இருந்தமைக்காக தேவனுக்கு நன்றி. விசேஷமாக "தந்தையர் தினத்தை அனுசரித்து, நமது தகப்பன் மார்களை கனப்படுத்த கர்த்தர் உதவிசெய்தார்.

நம்மில் அநேகர் விடுமுறை நாட்களுக்கு செல்லவும், சென்றவர்கள் செய்ய நினைத்த அநேக காரியங்களை செய்து முடித்து திரும்ப இந்த தேசம் வரவும், வேளைகளை, ஊழியங்களை தொடரவும், இன்னும் ஒரு சிலர் பிரயாணத்திற்காக ஆயத்தப்பட்டுக் கொண்டுள்ளனர். இவைகள் எல்லாவற்றிலும் கர்த்தரின் கரம் கூட இருந்ததற்காகவும், அவர் சமூகம் கூட இருந்ததற்காகவும் தேவாதி தேவனுக்கு ஸ்தோதிரம்.

நமது சபையின் பிள்ளைகள் 10th மற்றும் +2 தேவர்களில் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சியடைந்து, மேற்படிப்பிற்கு கடந்து செல்ல கர்த்தர் செய்த பெரிதான கிருபைகளுக்காக சபையார் யாவரும் ஆண்டவரை ஸ்தோதரிக்கலாம்.

" கர்த்தருடைய கிருபையோ அவருக்கு பயந்தவர்கள் மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள் மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது". நமது பிள்ளைகளுடைய எதிர்காலத்திற்காக நாம் ஒவ்வொருவரும் ஜெபிக்கலாம்.

"சமாதானம்" பெற்று சஞ்சலமின்றி வாழ நாம் அனைவரும் ஆசைப்படுகிறோம், வாஞ்சிக்கிறோம், விசுவாசிக்கிறோம். இதை எங்கு, எப்படி, யார்மூலம் பெறுவது என்பது நமக்கு கேள்வியாக இருக்கலாம். ஆனால் வேதம் நமக்கு தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்துகிறது.

**"கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன் கொடுப்பார், கர்த்தர் தமது ஜனத்திற்கு சமாதானம் அருளி அவர்களை ஆசீர்வதிப்பார்". சங் 29:11.**

எந்நாளும் கர்த்தருக்கும், வேதத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறவர்கள், தெய்வீக சமாதானத்தால் நிரம்பியிருப்பார்கள்.

"உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு, அவர்களுக்கு இடறலில்லை" சங் 119:165.

ஆம் பரியமானவர்களே அவர் அருளுகிற சமாதானம், மிகுந்த சமாதானம் நான் நினைப்பதற்க்கும், என்னுவதற்கும் மேலான தெய்வீக சமாதானத்தால் நிரப்புவார்.

வேத வசனங்களும், சத்தியமும், நல்சாட்சியும், "உனக்கு நீடித்த நாட்களையும், தீர்க்காயுசையும், சமாதானத்தையும் பெருகபண்ணும்." நீதி 3:2.

அவரை நோக்கின முகங்கள் பிரகாசிக்கும், அவர் "கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கி, உனக்கு சமாதானம் கட்டளையிடக்கடவர்".

நாம் சமாதானத்தோடே வாழ விரும்புகிறவர்களாய், சமாதானத்தை கொண்டு வருகிறவர்களாய் வாழ கர்த்தர் விரும்புகிறார்.

"சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" மத் 5:9. கர்த்தருடைய பிள்ளைகளுக்கு இதுவும் ஒரு பாக்கியம்.

நாம் ஒருமித்து, ஏக சிந்தையோடே, கர்த்தருடைய கற்பனைகளைக் கைகொண்டு, கட்டளைகளை நிறைவேற்றும் போதும் தேவ சமாதானம் நம்மோடு இருக்கும்.

"சகோதரரே, சந்தோஷமாயிருங்கள், நற்சீர் பொருந்துங்கள், அறுதலடையுங்கள், ஏக சிந்தையாயிருங்கள், சமாதானமாயிருங்கள், அப்பொழுது சமாதானத்துக்கும் காரணராகிய தேவன் உங்களோடே இருப்பார்" IIகொரி 13:11.

இயேசு தரும் சமாதானம், நம் அனைவரையும் ஆட்கொள்ளட்டும், அவர் பிறந்தபோது, பரம சேனையின் திரள்தோன்றி

"உன்னத்ததிலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக" என்ற சொல்லி தேவனை துதித்தார்கள். நாமும் அப்படியே சொல்லி தேவ நாமத்தை துதித்து சமாதானத்தோடு வாழ கர்த்தர் கிருபை செய்வாராக.

இம்மாதத்தில் நடை பெறவிருக்கும் எல்லா ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்வோம். கர்த்தர் வழி நடத்துவார். ஆமென்.

சபை ஊழியர்,
சகோ.ஜெயசேகர்

## தேவ செய்தி

### எதை நோக்கி செல்கின்றாய்?

அன்பான சகோதர, சகோதரிகளே! இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். மீண்டுமாக இச்செய்திமலர் வாயிலாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைந்து; என் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

நம் அன்றாட வாழ்வில், நாம் எதை நோக்கிச் செல்கிறோம்? நம் வாழ்வின் குறிக்கோள் தான் என்ன? தேவன் நம் வாழ்வில் நமக்காக வைத்துள்ள திட்டங்கள் தான் என்ன? என்று ஒரு நாளாவது, நாம் சிந்தித்தது உண்டா? (அல்லது) தேவனிடம் நாம் கேள்வி கேட்கிறவர்களாய் இருக்கிறோமா? என்று நம்மை, நாமே ஆராய்ந்து பார்ப்போம்.

**உலகம், பண ஆசை, சொத்து: (மத்தேயு 6:19)**
பூமியிலே நாம் பொக்கிஷங்களை சேர்த்து வைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும், துருவும் அவைகளைக் கெடுக்கும் , இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள் இத்தகைய பொக்கிஷங்கள் யாவும் அழிந்து போகக் கூடியவைளே. (மத் 6:20)

மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும்; மனம் திருந்தி, இரட்சிப்பைப் பொறாவிட்டால்; அவனுக்கு எந்தவித இலாபமும் கிடைப்பதில்லை.

## மாம்ச சந்தை, துணிகரமான பாவங்கள்: (ரோமர் 8:6)

" மாம்ச சிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனுள்ள சமாதானமுமாம்.

மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை.(கொலேசெயர் 2:19). நம்முடைய மாம்சசிந்தையினாலே வீணாய் இறுமாப்பு கொண்டிருந்தால், நம்முடைய பந்தயப் பொருளை நாம் இழந்து விடுவோம். நாம் வஞ்சிக்கப்படாதபடி எச்சரிக்கையாக இருக்க வேண்டும். (சங் 19:13)

பாவத்தின் சம்பளம் மரணம், துணிகரமான பாவங்களுக்கு நாம் விலக வேண்டும். 'அறிந்தும் செய்பவர்கள்; அநேக அடிகளால் அடிக்கப்படுபவார்கள்' என்று வேதம் நம்மை எச்சரிக்கின்றது.

## மனிதனை பிரியப்படுத்துதல்:

இன்று நாம், தம் பதவிக்காக பட்டம், பேர் புகழுக்காக மனிதனை பிரியப்படுத்த முயற்சி செய்கின்றோம். (11கொரி 6:14)

' அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக. நமக்குள் இருக்கும் வெளிச்சம் இருளாகதபடி நாம் எச்சரிக்கையாக வாழ வேண்டியது மிக அவசியமானதாகும்.

## பின்மாற்றமான வாழ்க்கை:

நாம், நம் இயேசு கிறிஸ்துவின் அன்பை விட்டுத் தூரமாக விலகிச் சென்று கொண்டிருக்கிறோமா? பேதுருவைப் போல மறுதலித்தும்; யூதாசைப் போல, அவரைக் காட்டிக் கொடுத்தும் வாழ்கின்றோமா?
நம் இறப்பிற்கு பின் ஒரு வாழ்வு உண்டு என்று நாம் அறிந்தும்; நாம் பரலோகத்தையா? (அல்லது) நரகத்தையா? நோக்கி நம் வாழ்வு சென்று கொண்டிருக்கிறதா. நம் மனச்சாட்சிக்கு விரோதமாக நாம் பாவம் செய்யாதபடி, பின்மாற்றமான வாழ்வை விட்டு; நாம் தேவனுக்கு பயந்து வாழ வேண்டும்.

## இயேசு கிறிஸ்து– நித்திய ஜீவன்:

(யோவான் 5:24) நாம் வசனத்தைக் கேட்டு தேவனை விசுவாசிக்கிறவர்களுக்கு நத்திய ஜீவன் உண்டு. தேனுடைய கிருபை

**வரமோ, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்.**

**பிரியமானவர்களே! நாம் எதை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம்? நம் குடும்பத்திற்காக, சபைக்காக, ஊழியங்களுக்காக; நம் வாலிப பிள்ளைகளுக்கு நாம் திறப்பிலே நின்று ஜெபிக்க வேண்டும். குடும்பமாக ஊழியம் செய்வதை ஆண்டவர் விரும்புகின்றார். அனுதின வேதவாசிப்பு, ஜெபவாழ்க்கை உண்டா? இவ்வுலகில் அன்பு, நீதி கிடைக்கவில்லை என்றாலும்; நாம் உண்மையாக தேவனுக்கு பயந்து நீதியாக வாழ்வோமென்றால்; நித்திய நித்தியமாக பரலோகத்தில் மகிழ்ச்சியான வாழ்வு நமக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு நாம் வாழ முயலுவோமாக! கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக!**

**காத்தரின் பணியில்,**
**சகோதரி.பியூலா ஜெகநாதன்**

# Kids Corner

## The Lazy Soldier

Once upon a time lived a soldier named Benny. Benny held the rank of sergeant in the country of Zeal's army. Sergeant Benny was a very hard worker. He saw that his rifle was properly taken care of, his uniform clean, and that all orders were followed. The people of Zeal slept peacefully knowing that Sergeant Benny was on the job.

One day, the top official of the country of Zeal's army noticed what an outstanding job Sergeant Benny was doing. He spoke with some of the other officials, and they decided to send Benny to the island of Lackadaisical.

You see the soldiers on the island of Lackadaisical were not very hard workers. The island wasn't very safe. Rumor had it that this island would be the first place attacked, when a war broke out. Benny would be a big help to make the island safe.

Benny gladly accepted his new orders. When he arrived on the island of he couldn't believe his eyes. The other soldiers' uniforms were

very dirty, their rifles were covered with dirt and grim, their shoes needed to be shined, and most of them were lying in the shade drinking lemonade. Benny shouted, "What kind of soldiers are you?"

The other soldiers laughed and said to Benny, "Lighten up! If you got a problem, you should go see the top official of the island."

Benny marched right over to the official's house and asked to speak with him. The top official's name was Mr. Apathetic. Benny noticed that Mr. Apathetic was in worse shape than the soldiers. Neither the top official nor any soldier listened to Benny.

This went on for days and days. After a month of this, Benny began to think that maybe he had also been working just a little bit too hard. The island was beautiful and had many nice places to swim. He decided to take the afternoon leave and go swimming. After swimming, he was very hungry and ate a big lunch. After eating, he took a long nap. At first Sergeant Benny felt bad about not doing his work but then it became his habit. His rifle was caked with mud, he couldn't find his boots, his shirt was torn, and he needed to comb his hair.

Benny was just getting ready to sleep when the alarm sounded. The island of Lackadaisical was under attack. Benny jumped and began to search his rifle. However, he couldn't run very fast because he was so out of shape. The enemy quickly defeated the soldiers of the island. Not one of the people of island survived.

We are also in an army—God's army. As soldiers in God's army, we need to make sure that we stay in shape, by reading our Bibles, praying, worshiping our Lord, and helping others. Many things can try to distract us. We may think its more fun to ride our bikes or play videogames, and it is not wrong to do those things, but we need to make sure we put God first. Some people may not understand the importance of prayer, reading the Bible, or spending time serving the Lord. Don't follow their bad examples. God wants the best for us and He wants us to stay in shape. That's an order, little soldier!!

***Prayer :*** Dear Lord, help me to be active in your army. Help me to read my Bible daily, pray and help others. I should not follow any wrong examples. Help me to be active, do my homework on time, keep my uniform and shoes clean. In Jesus'name I pray, amen.

***Verse to memorise :*** The soul of a lazy man desires, and has nothing; But the soul of the diligent shall be made rich. - Proverbs 13:4

## வாலிபர் பகுதி

### உத்தமனாய் இருப்போமா?

நீதி 10:9 "உத்தமனாய் நடக்கிறவன் பத்திரமாய் நடக்கிறான்"

1இரா 8:61 " உங்கள் இருதயம் நம்முடைய தேவனாகிய கர்த்தரோடு உத்தமமாய் இருக்க கடவது"

உத்தமன் என்றால் உண்மையுள்ளவன் பொய் போசாதவன் பொய்யை வெறுப்பவன். வேதாகமத்தில் அநேக உத்தமர்களை காணமுடியும். "காலேப் என்னும் ஒரு உத்தமன் இருந்தான்."

யோசுவா 14:8 " நானோ என் தேவனாகிய கர்த்தரை உத்தமனாய் பின்பற்றினேன்" என்று காலேப் கூறுகிறான். யோசுவா 14:7 "தேசத்தை வேவு பார்க்க மோசே காதேஸ் தேசத்திலிருந்து காலேபை அனுப்புகிறான். அவன் போய் பார்த்து விட்டு திரும்பி வந்து தன் இருதயத்திலுள்ள படியே மறு செய்தி கொண்டு வந்தான். அவனுடைய இருதயத்தில் இருந்ததை மறைக்கவில்லை. கானான் தேசத்தான் என்ன பார்த்தானோ அதை அப்படியே மோசேயிடம் கூறுகிறான். அவனோடே கூட இருந்த சகோதரர்கள் இஸ்ரவேல் ஜனத்தின் இருதயத்தை கரைப் பண்ணின காலோபுக்கோ கர்த்தர் செழுமையான இடத்தை கொடுத்தார்.

1இரா 3:6 தாவீது உண்மையுள்ளவன், நீதியுள்ளவன் மன நேர்மையுடையவன் என்று சாலமோன் கூறுகிறார். அதினால் பெரிய கிருபையை கர்த்தர் அவனுக்கு கொடுத்தர். சிங்காசனத்தில் வீற்றிருக்க ஒரு குமாரன் இல்லாமற் போவதில்லை என்று கட்டளை கொடுத்தார்.

2 சாமு 22:26 "உத்தமனுக்கு நீர் உத்தமனாக இருக்கிறீர்."
2 சாமு 22:31 "தேவனாகிய வழி உத்தமமானது" என்று வாசிக்கிறோம். அந்த வழியில் நாமும் நடந்தால் தமது சந்ததியும் நிச்சயமாக ஆசிர்வதிக்கப்படும்.

யோபு 1:8-ல் கர்த்தர் யோபுவை உத்தமன் என்று சாட்சி கொடுத்தார். யோபு 8:20 -ல் தேவன் உத்தமனை வெறுக்கிறதுமில்லை என்று வாசிக்கிறோம். யோபு 28:5-ல் யோபு கூறுகிறார் "என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலகேன்.

நீதி 11:5-ல் உத்தமனுடைய நீதி அவன் வழியை செம்மைபடுத்தும்.
நீதி 10:9-ல் கர்த்தருடைய வழி உத்தமர்களுக்கு அரண்.
சங் 15:1 யார் கர்த்தருடைய கூடாரத்தில் தங்குவான்? யார் அவருடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுவான்? அவனுடைய குணாதிசயங்கள் . . .

1.நாவினால் புறங்கூறமாட்டான்
2.தோழனுக்கு தீங்கு செய்யமாட்டான்
3.அயலான் மேல் சொல்லப்படும் நிந்தையான பேச்சை எடுக்கமாட்டான்
4.கர்த்தருக்கு பயந்தவர்களை கனம்பண்ணுகிறான்
5.தன் பணத்தை வட்டிக்கு கொடுக்கமாட்டான்
6.பரிதானம் (லஞ்சம்) வாங்மாட்டான்.

இதை கடைபிடித்து வாழுகிற கிறிஸ்தவன் என்றும் அசைக்கப்படுவதில்லை. "கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள்." சங் 119:1
உத்தமர்களாய் நடக்க தேவனுடைய வார்த்தையை பின்பற்றுவது மிகவும் அவசியமாக இருக்கிறது.

**ஜெபம் :**

"உத்தம நிதானிப்பையும், அறிவையும் எனக்கு போதித்தருளும் தேவனே!" சங் 119:66
நாங்கள் உத்தம இருதயத்தோடு நடக்க கிருபை தாரும் . ஆமென்.

வாலிபம் இயேசுவுக்கே

## வரண்ட நிலம்

விதைத்த விதை ஒன்று
பலநூறாய் பலன் தரவே
பாதியிலே வெட்டுண்டேன்
பாவியாய் கையில் சிக்குண்டேன்
அடைக்கப்பட்ட விலை நிலமாய்
என் வாழ்க்கை ஆனதையா
உம் வார்த்தை வாராதோ
என் நிலத்தில் நீரூற்றாய்
கன்மலையின் நீரூற்றை
என் கனவில் காண்கின்றேன்
கரம் பிடித்து தூக்கிடுவீர்
கண்ணிமைக்கும் நேரத்தில்
வரண்ட நிலம் ஒன்று
வருடங்களாய் காத்திருக்க
வாசலிலே நிற்கின்றேன்
உம் வருகைக்காய் ஏங்குகின்றேன்.

–சகோதரி. வனித்தா

..உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்..

... (ஆதி – 16:10)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

சகோ. ஜெப துரை
செல்வி.கெத்சியா ராஜேந்திரன்
சகோ. பிராங்ளின் கலை செல்வன்
சகோதரி . ஆனந்தவள்ளி ராஜேந்திரன்
சகோதரி. மெர்ஸ்லின் ஏசுரெத்தினம்
செல்வி. காயத்ரி கொம்மையன்
சகோ. ஜாப் ஆபிரகாம் வில்கின்ஸ்
செல்வன். எரிக் நாதன் ஆன்டனி
சகோ. கிறிஸ்டோபர் தேவராஜ்
சகோ. வில்சன் செல்லையன்
சகோதரி. எமிமாள் சாமுவேல்
சகோ. ஆரோக்கிய தாஸ்
சகோதரி. ஸ்நேக லதா கிறிஸ்டோபர்
சகோ. கென்சிங்ராஜா

செல்வி. புஷ்பா ராஜன்
சகோ. சதீஷ்குமார்
சகோ. வேளாங்கண்ணி
சகோ. அருண் இம்மானுவேல்
செல்வன். ஆரோன் விஜயன்
சகோ. ஜெரின்
செல்வி. சிஃபன்சிஹா சாம்ஆனந்த்
சகோ. மேஷாக் சைமன்
சகோதரி. சௌமியா சுனில் வின்ஸ்
சகோதரி. ஆஸ்லின் ரோனியா சுபின் சிங்
செல்வன். பெனோ ஜெரின்
சகோதரி. டெய்சி ஶ்ரீனா ஆன்டனி
சகோ. சங்கீதராஜ்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் (ஆதி .22:18)

திருமதி /திரு. எபிநேசர் .V (MOH)
திருமதி /திரு. ஜெயக்குமார் ஞானதாஸ்
திருமதி / திரு. ஸ்டீபன் ஜெயக்குமார்
திருமதி /திரு.டேனியல் ராஜ்
திருமதி /திரு. ராஜேந்திரன்
திருமதி / திரு. இம்மானுவேல் ஸ்டீபன்

திருமதி / திரு. ஜெரின்
திருமதி / திரு. பால்ராஜ் ஆமோஸ்
திருமதி /திரு. ராஜேஷ் CR
திருமதி / திரு. சிவகுமார்
திருமதி / திரு. ஆரோக்கியராஜ்

நீ வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் இடங்கொண்டு பெருகுவாய்;

*ஏசாயா 54:3*

# 2022 ஆகஸ்ட் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 07/08/2022 | சகோ.கிறிஸ்டோபர் (GTC) | சகோ.பிரசாத் |
| 14/08/2022 | சகோ.எபிநேசர் (GTC) | சகோ.ஜெகநாதன் |
| 21/08/2022 | சகோ.சுகுமார் | சகோ.ஃபிராங்கிளின் (MOH) |
| 28/08/2022 | சகோ.ஜான் கெஸ்டன் | சகோ.ஃபிராங்கிளின் |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 05/08/2022 | சகோ.ஆரோக்கய ராஜ் | சகோ.ஆரோக்கய தாஸ் |
| 12/08/2022 | சகோ.வேலு ராமர் | சகோ.ஏசுரெத்தினம் |
| 19/08/2022 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 26/08/2022 | சகோ.எபிநேசர் | சகோ.கிறிஸ்டோபர் .J |

**11/08/2022 அன்று முழு இரவு ஜெபம்**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணி வரை

**26/08/2022 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம்– மாலை 6:30 முதல் 8:00 மணி வரை
(வேத வினா பகுதி–ஓசியா, யோவேல், ஆமோஸ்)

**31/08/2022 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம்– மாலை 6:30 முதல் 8:00 மணி வரை
கூடுகையை பொருப்பெடுத்து நடத்தும் குடும்பம் – சகோதரி. சரண்யா சதீஷ்
(வேத வினா பகுதி–யோனா & மீகா )

# 2022 ஆகஸ்ட் மாதத்திற்கான வேத வினா!

கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்



1.பள்ளத்தாக்குகளில் எவை நிறைந்திருக்கிறது?

2.அருவருப்பான அக்கிரமங்களை செய்பவர்கள் யார்?

3.எது கர்த்தருக்கு பிரியமாய் இருக்கும்?

4.எந்த கோத்திரம் தன்னுடையது என்று கர்த்தர் சொல்லுகிறார்?

5.ஆண்டவர் யாருடைய வேஷத்தை இகழுவார்?

6.ஜீவனை விட எது நல்லது?

7.நான் ___________ நாளில் உம்மை _________ ?

8.எந்த பருவதத்திற்கு உயர்ந்த சிகரங்களுண்டு?

9.கர்த்தருடைய வாசஸ்தலம் எங்கிருக்கிறது?

10.தூதர்களின் அப்பம் எது?

11.எது கத்தியை போல் இருந்தது?

12.கர்த்தர் எப்படி இரட்சிப்பார்?

13.ஜீவபுத்தகத்தில் இருந்து யாருடைய பேரை கிறுக்கிபோட சொல்கிறார்?

14.தாவீதின் மகனை குறித்து சொல்லப்பட்ட சங்கீதம் எது?

15. கொடுமையை___________ கொள்ளையினால் _________ ?

விடைகளை வருகின்ற 20-08-2022க்குள்
(WhatsApp #65040638) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில் சங்கீதம் 52-78 ஆகிய அதிகாரங்களில் பதிலை கண்டுபிடிக்கவும்.

– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; –மத்தேயு 7:7

## 2022 –ஜுலை மாத வேத வினாவுக்கு விடை

1.பரிசுத்த அலங்காரத்துடனே (சங்கீதம் 29:2 )
2.துன்மார்க்கன் (சங்கீதம் 10:7)
3.கர்த்தரின் காருணியங்கள் (சங்கீதம் 25:6)
4.செம்மையான இருதயமுள்ளவர்கள் மேல் (சங்கீதம் 36:10)
5.அழிந்துபோகும் மிருகங்களுக்கு (சங்கீதம் 49:12)
6.பொல்லாதவர்களை (சங்கீதம் 37:1)
7.என்னை ஒடுக்குகிற துன்மார்க்கர் என்னைச் சூழ்ந்துகொள்ளுகிற என் பிராணப் பகைஞர் (சங்கீதம் 17:9,10)
8.தாவீது தன் குமாரன் அப்சலோமுக்கு முகவுரை (சங்கீதம் 3)
9.துயரத்தினால் (சங்கீதம் 6:7)
10.சங்கீதம் 30
11.சிறுமைப்பட்டவன் மேல் சிந்தையுள்ளவன் (சங்கீதம் 41:2)
12.நொறுங்குண்ட ஆவிதான் (சங்கீதம் 51:17)
13.கர்த்தருடைய காருணியம் (சங்கீதம் 18:35)
14.பொய் உதடுகள் (சங்கீதம் 31:18)
15.ராஜாக்கள் (சங்கீதம் 2:10)

## 2022– ஜுலை மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis.பியூலா ஜெகன்நாதன்
Sis.ஜீனா சதிஷ்குமார்
Sis. சுகந்தி தம்பு குமார்
Sis.நித்யா ஜோன்ஸ்
Sis.சுபா ஸ்டீபன்
Sis.வனித்தா
Sis.ஜெஸ்லெட்
Sis.அனிதா ஆரோக்கியதாஸ்
Sis.ஷீஜா ராபின்
Sis.மெர்ஷிலின்தயா ஏசுரெத்தினம்

## சகோதரிகள் பகுதி

### கிறிஸ்துவினால் வரும் பெலன்

பிலி 4:13 – "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு."
குறிப்பாக பெண்கள், சரீர பெலத்தை அல்ல; தேவ பெலத்தை சார்ந்து வாழும்போது, அவர்களுடைய வாழ்க்கை வெற்றியுள்ள வாழ்க்கையாக மாறுகிறது. அன்னை தெரசா தேவ பெலத்தை சார்ந்து வாழ்ந்ததினால், யாராலும் சாதிக்க முடியாத வல்லமையாக ஊழியத்தை வெற்றிகரமாய் செய்தார்கள். காரணம் – பண பலமோ, மனித பலமோ அல்ல தேவ பெலனே அவர்களை வழிநடத்தியது.

சங் 92:13,15 "கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள் எங்கள் தேவனுடைய பிராகாரங்களில் செழித்திருப்பார்கள். அவர்கள் முதிர்வயதிலும் கனி தந்து, புஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள்."
தேவ பெலத்தை பெற்றுக் கொள்ள, ஒரே வழி – நாம் கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்களாய் இருக்க வேண்டும். ஆலயம் கர்த்தருடையது, கர்த்தருக்கே உரியது, ஜெபம், வேத வாசிப்பு, ஆராதனை, தியானம் – கர்த்தருடைய ஆலயத்திலே நடக்க கூடிய காரியங்கள் இவைகள்தான். இப்படிப்பட்ட காரியங்களிலே, நாம் வேரூன்றி நாட்டப்பட்டவர்களாய் இருக்க வேண்டும். அப்படி இருக்கும்போது, தேவன் தரும் ஆசீர்வாதம் முதிர்வயதிலும் கனிதந்து, புஷ்டியும் பசுமையுமாய் இருக்கமுடியும் அப்படி வாழ்ந்த அன்னாளைக் குறித்து லூக்கா 2:36–38–ல் வாசிக்கிறோம். அன்னாளைக் குறித்து மூன்று முக்கியமான காரியங்களை நாம் தியானிக்கலாம்.

### 1.தனிமையிலும் மகிமை:

அன்னாள் ஏழு வருடம் மட்டும் புருஷனுடனே வாழ்ந்தவள் பெரும் பாலான வாழ்க்கை தனிமையிலே கழிக்க வேண்டிய சூழ்நிலை. ஆனால், தனிமை அவளை வாட்டவில்லை. அவள் தேவனை சார்ந்து வாழ்ந்தாள். தேவ மகிமை அவள் வாழ்க்கையில் காணப்பட்டது . அன்னாள் தேவனை படுத்தினாள். ஆதவன் அன்னாளை மகிமைப் படுத்தினார். ஒரு தீர்க்கதரிசியாக உயர்த்தினார். சாத்ரதாக், மேஷாக், ஆபேத்நேகோ தேவன் ஒருவருக்கே மகிமை செலுத்துவோம் என்றார்கள். அக்கினியில் தூக்கிப்போடபட்டார்கள். தேவன்,

அவர்களை தனிமையாய் விடவில்லை. பரலோகத்திலிருந்து இறங்கி வந்தார். தேவனோடு இணைந்து ஒரு பூங்காவிலே நடப்பது போல் நடக்க ஆரம்பித்தார்கள். அக்கினிசூளை ஒரு தென்றல் வீசும் பூங்காவாய் அவர்களுக்கு மாறினது. காரணம், தேவபிரசன்னம், தேவனோடு இணைந்து வாழும் வாழ்க்கை. அன்னாள் தேவாலயத்தை விட்டு நீங்காமல், தேவனோடு இணைந்து வாழ, தேவ பிரசன்னத்தில் வாழ, தன்னை அர்ப்பணித்தாள். தனிமை வெறுமையை அல்ல; தேவ மகிமையை பெற்று வாழந்தாள்.

## 2.முதுமையிலும் இளமை:

அன்னாளுக்கு ஏறக்குறைய எண்பத்து நாலு வயது சரீர சோர்வு தளர்ச்சி ஒரு தடையம் இருக்கவில்லை. ஆவிக்குரிய வாழ்வில், இளமையான ஒரு வாலிபப்பெண்ணாகக் காணப்பட்டாள். இந்தக் காலத்தில், வாலிப் பெண்களோ எளிதில் சோர்வடைந்து விடுவார்கள். ஆனால், அன்னாளோ எண்பத்து நாலு வயதிலும் இரவும் பகலும் உபவாசித்து ஜெபம் பண்ணுகிறாள். தேவனைக்குறித்து இன்னும் அறிய வேண்டும். தேவனோடு இன்னும் நெருங்கி ஜீவிக்க வேண்டும் என்ற வாஞ்சை அன்னாளை உந்தித்தள்ளியது. இரவும் பகலும் உபவாசித்து ஜெபிக்கிறாள். சரீர பெலவீனம் ஒரு தடையாய் இருக்கவில்லை. தேவ குமாரனாகிய இயேசுவை முகமுகமாய் தரிசிக்கக்கூடிய பாக்கியம் அவர்களுக்கு கிடைத்தது. முதிர் வயதிலும் ஒரு வாலிபப் பெண்ணைப்போல உற்சாகமாய் வாழ்கின்றாள்– ஜெபிக்கிறாள், ஆராதனை செய்கிறாள், உபவாசிக்கிறாள், எருசலேம் ஆலயத்தில் கர்த்தரைப்புகழ்ந்து பிரசங்கம் செய்கிறாள். முதிர்வயதிலும் கனிதந்து, புஷ்டியும் பசுமையுமாயிருக்கிறாள். இரகசியம் என்ன? அவள் கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டிருந்தாள்.

## 3.வெறுமையிலும், செழுமை:

உலகப்பிராகாரமாய் வாழ்பவர்கள் செழிப்பாக இருப்பது போல தோன்றுவார்கள். ஆனால், அவர்களுடைய வாழ்வில் வெறுமைதான், நிம்மதி கிடையாது, உண்மையான சமாதானம் இல்லை. தேவன் இல்லாத பகட்டான வாழ்க்கை, சாபத்தைக் கொண்டு வரும். அத்திமரம், பார்ப்பதற்து பச்சை பசேலென்று இருந்தது, இயேசு அருகே சென்று பார்த்தபோது, கனி இல்லை. அது வெறுமையாள மரம். இன்று, பெண்கள் உலக அலங்காரத்தை நோக்கி ஓடுகிறார்கள். என்ன பரிதாபம்! அவர்கள் இருதயத்தில் வெறுமை! தேவனுக்கு இடம் இல்லை.

வெறுமையை, செழுமையாய் மாற்ற ஆண்டவராகிய இயேசு, சிலுவை மரத்தில் தன்னையே வெறுமையாக்கி, ஒப்புக்கொடுத்தார். வெறும் அலங்கார மரமாய் அல்ல; சிலுவை மரத்தில் தொங்கின இயேசுவோடு இணைத்து வாழும் போது, தேவன் நமக்கு செழுமையை கொடுக்கிறார். அன்னாளின் வாழ்க்கை வெறுமையாய் அல்ல; முதிர் வயதிலும், செழுமையாய், ஆவியின் கனிகள் நிறைந்ததாய் காணப்பட்டது. தேவ ஆவியானவர் அவளை வழிநடத்தினார். அன்னாளோடு பேசினார்– அன்னாளே, ஆலயத்திற்குப் போ, இயேசுபாலகனை நீ அங்கே காண்பாய் என்று ஆவியானவர் அவளை வழிநடத்தினார். முதிர் வயதிலும் கர்த்தரைப்புகழ்ந்து, இரட்சிப்பைக் குறித்துப் பேசுகிறாள்.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, தனிமை உங்களை வாட்டுகிறதா? முதுமை சோர்வைக் கொண்டு வருகிறதா? வாழக்கை வெறுமையாய் காட்சியளிக்கிறதா? தேவனுக்கு வாழக்கையை அர்ப்பணியுங்கள் தேவனுடைய ஆலயத்திலே நாட்டப்பட்ட ஒரு வாழ்க்கை – ஜெபம், வேதவாசிப்பு, தியானம், உபவாசம், ஆராதியுங்கள் உங்கள் வாழ்க்கை என்றும் தோட்டத்தை அலங்கரிக்கட்டும். ஆதியிலே தேவனோடு சஞ்சரித்த ஏதேன் தோட்ட அனுபவம் உங்கள் வாழ்க்கை என்றும் தோட்டத்தில் மலரட்டும். தேவன் விரும்பும் ஆவியின் கனிகளாய் உங்களை அலங்கரிப்பார்; தனிமையிலும் மகிமை, முதுமையிலும் இளமை, வெறுமையிலும் செழுமையை அனுபவிப்பீர்கள் தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் பணியில்,
**சகோதரி. லதா கிறிஸ்டோபர்**

## மிஷனரி செய்தி

## ஜோசப் டேன்யன்

ஜோசப் டேன்யன் என்பவர் பெல்ஜியம் நாட்டைச் சார்ந்த ஒரு கத்தோலிக்க பாதிரியார்.

1873–ஆம் ஆண்டு ஹவாய் தீவிலுள்ள தொழு நோயாளிகளுக்கு மத்தியில் ஊழியம் செய்வதற்காக அவர் அனுப்ப பட்டார்.
அதிக உற்சாகத்தோடு அங்கு வந்தார். ஒவ்வொரு தொழு நோயாளியிடமும் நட்பை வளர்க்க வேண்டும் என்று எண்ணத்துடன் வந்தார். ஆனால் மக்களோ, அவரை விட்டு விலகினர். அவர் ஒரு சிற்றாலயத்தைக் கட்டினார். அங்கே

ஆராதனை நடத்தினார். தன் முழு அன்பையும் தொழு நோயாளியிகளிடம் ஊற்றினார். ஆனால் அவை எல்லாம் வீணாயிற்று.

அவருடைய ஊழியத்திற்கு அளவே இல்லை. 12 வருடங்களாக இவ்வாறு போராடி ஊழியம் செய்தார். ஆனால் ஒன்றும் பயனில்லை. கடைசியாக அவர் அந்த இடத்தை விட்டு வெளியேற தீர்மானித்தார். கப்பல் ஏறுவதற்கு தளத்தில் மன வேதனையோடு நின்று கொண்டிருந்தார்.

அப்பொழுது அவர் தன்னுடைய உள்ளங்கைகளை உற்றுப் பார்த்தார். அங்கு சில வெள்ளை புள்ளிகள் காணப்பட்டன. அவை உணர்ச்சி இன்றி இருந்தன.

அவர் தானும் தொழு நோயாளி என்பதை உணர்ந்தார். டேனியன், நாமும் இவர்களை போல தொழுநேயாளி ஆனதை குறித்து சற்றும் கவலை படவே இல்லை, தொழு நோயாளிகள் வசிக்கும் இடத்துக்கு மீண்டும் சென்றார். தன்னுடைய ஊழியத்தை மீண்டும் தொடங்கினார்.

அவரும் தொழு நோயாளி என்ற செய்தி எங்கும் பரவியது. அவருடைய வீட்டைச் சுற்றி பலர் வந்தனர்.அவருடைய நிலைமை, தங்களைப் போல் ஆயிற்றே என உணர்ந்தனர். அந்த வாரம், ஞாயிறு அன்று அவருக்கு மிகப் பெரிய ஆச்சரியம் காத்திருந்தது. சிற்றாலயம் நிரம்பி வழிந்தது. அன்பின் ஆழத்தைக் குறித்து அவர் பிரசங்கித்தார். அவர் இறையியலுக்கு அப்பால் போதித்தார். அவருடைய ஊழியம் வெற்றிகரமாக அமைந்தது.

## பாஸ்டர் என். தாமஸ்

துடிப்புள்ள இளைஞனாய் காட்டாத்துறை உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராய் வேலை செய்து கொண்டிருந்தார். அச்சமயம் காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சியில் ஆவல் மிகு தலைவராய் தோழராயும் சேவை புரிந்தார்.

தக்க சமயத்தில் ஆண்டவர் இயேசுவை ஏற்றுக் கொண்டபின் ஆண்டவருக்கென்று தீவிரமாய் வைராக்கியமாய் தன் வாழ்நாள் முழுவதும் உழைத்தார்.

அவர்தான் காட்டாத்துறை பாஸ்டர் என். தாமஸ் அவர்கள். 1964ஆம் ஆண்டு காட்டாத்துறை ஜெப வீட்டில் ஊழியத்தை ஆரம்பித்தார்கள்.

38 ஆண்டு கால ஊழியத்தில் அவர்கள் செய்த பிரசங்கங்கள் நடத்திய கன்வென்ஷன்கள், எழுப்புதல் கூட்டங்கள், மற்றும் ஆரம்பித்த சபைகள் ஏராளம்.

சிறந்த ஒரு அப்போஸ்தலனாகவும், பூரண சுவிஷேச பெந்தெகொஸ்தே சபையின் தழலவராகவும் 25 ஆண்டுகள் பணியாற்றினார்.

அனைவரும் விரும்பி வாசிக்கும் "நேசரின் தோட்டம்" எனும் ஆவிக்குரிய மாதாந்திர பத்திரிக்கையின் ஸ்தாபகரமாய், ஆசிரியராய் 17 ஆண்டுகள் பணயாற்றினார்.

பாஸ்டர் அவர்கள் 16-03-02 அன்று கர்த்தரிடம் இளைப்பாற இவ்வுலகத்ததை விட்டு கடந்து சென்றார்கள். பாஸ்டர் என்.தாமஸ் அவர்கள் இக்கால தலைமுறைக்கு சிறந்த முன்மாதிரி.
இளம் சந்ததியினர் பாஸ்டர் தாமஸ் போன்றோரின் சாட்சிகளை அறிந்து, பிரதிஷ்டை நிறைந்த வாழ்க்கை வாழ்ந்தால் கிறிஸ்துவின் சுவிசேஷம் இன்னும் பலமாய் முழங்குவது உறுதி.

காத்தரின் பனியில்,
**சகோ.எபிநேசர்.**

## அன்பு

பணத்தை எந்த நிமிடத்திலும்
சம்பாதிக்கலாம், படைத்தவன் துணை
இருந்தால், ஆனால் உண்மையான
உறவுகளை சம்பாதிக்க முடியாது
அன்பாக பேசுங்கள் ! பண்பாக
நடந்து கொள்ளுங்கள்!

ஒரு சொட்டு கூட இரத்தம் வராமல்
ஒருவரை கொன்று விடும் கூர்மையான
ஆயுதம் மனிதனின் நாக்குதான்
போலித்தனம் இல்லாத புன்னகை
சுய நலம் இல்லாத உறவு
கைமாறு கருதாத உதவி
கவலைகளை மறக்க வைக்கும்
எதிர்பார்ப்பு இல்லாத அன்பு
அமைதியாக இருக்கும் மனிதனிடம்
மொத்த பிரபஞ்சமும் சரணடைந்துவிடும்.

– சகோதரி. விஜயகுமாரி

# கடந்த மாத நிகழ்வுகள் தங்கள் பார்வைக்கு சில

















# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

சபை முதன்மை ஊழியர்

சகோ. ஜெயசேகர்

96646444

செயலாளர்

சகோ. இயேசு ரெத்தினம்

23924262 - 97545812

பொருளாளர்

சகோ. பால் ஜெகநாதன்

66889535 - 98852812

பெண்கள் ஐக்கிய தலைவி

சகோதரி . எப்சிபா ஸ்டீபன்

67792009 - 56640551

வாலிப ஐக்கிய தலைவர்

சகோ. பிரசாத் சுந்தரேசன்

60781168

Church Website Address - ahmaditamilchurch.com

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only